தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 26, சுபானு-திருவள்ளுவர் ஆண்டு 2034
2003 மே 9, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து"

உதவி என்பது, செய்யப்படும் அளவைப் பொறுத்து சிறப்படைவதில்லை; அந்த உதவியைப் பெறுபவரின் பண்பைப் பொறுத்தே அதன் அளவு மதிப்பிடப்படும்.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்

(அ) மயிலாடுதுறையில் கொலை

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் தலைவர் கேட்கிறார்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் கடந்த 30 ஆம் தேதி இரவு குருஞானசேகரன் என்பவர் சிலராலே வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். மயிலாடுதுறை பழைய ஸ்டேட் பாங்க் ரோட்டிலே திருவழுந்தூரைச் சேர்ந்த அவருடைய நண்பரோடு நடந்து வந்துகொண்டிருந்த நேரத்தில் மறைந்திருந்த கும்பல் அவர்மீது கை எறி குண்டுகளை வீசியெறிந்த பிறகு அரிவாள் போன்ற ஆயுதங்களால் வெட்டிச் சாய்த்திருக்கிறார்கள். அன்றையதினமே மயிலாடுதுறையில்

உள்ள மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டு அங்கே இறந்துவிட்டார். அவருடைய நண்பர், திருவழுந்தூரைச் சேர்ந்த அவருடைய நண்பர், தஞ்சாவூரிலே இருக்கிற மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்தக் கொலைக்கு பல்வேறுவிதமான காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். காங்கிரஸ் கட்சியில் விவசாய சங்கத் தலைவராகவும் அவர் இருந்திருக்கிறார். அவரைப் பொறுத்தவரையில் அங்கே அவருக்கு நல்ல பெயர் இருக்கிறது. என்றாலும் அங்கே அவர் ஒரு புதிய குடியிருப்புப் பகுதியை ஏற்படுத்தியிருக்கிறார். அந்தப் பகுதியிலே இருக்கிற சிலபேர்—சேத்தங்குடியைச் சேர்ந்த, சேத்தங்குடி, பசுபதி அக்ரகாரத்தைச் சார்ந்த—அங்கே குடியிருப்புப் பகுதியை ஏற்படுத்தியிருக்கிறார். அந்தப் பகுதியைச் சேர்ந்த சிலபேர்—அதில் ஒரு ஏக்கர் நிலம் முழுமையாக அவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்றும் அதுமட்டுமல்லாமல் பணமும் கொடுக்க வேண்டும் என்றும், பெருந்தொகையைக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். அவர் கொடுக்க மறுத்துவிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அந்த விவரங்களுக்குள் போக வேண்டாம். அதாவது, ஒத்திவைப்புத் தீர்மானங்களோ அல்லது சிறப்புக் கவன ஈர்ப்புகளோ இல்லை. (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காக ஓர் ஒத்திவைப்புத் தீர்மானமாக நான் கொண்டு வந்தேன். இதுவரை எந்தவிதமான பதிலும் வரவில்லை. என்ன நடைபெற்றிருக்கிறது? அதற்குக் காரணமானவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? இல்லையா? மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா? இல்லையா? என்ன நடவடிக்கை அரசு இதுவரை எடுத்து இருக்கிறது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானங்களோ, சிறப்புக் கவன ஈர்ப்புகளோ, கவன ஈர்ப்புகளோ நம்முடைய நிகழ்ச்சி நெருக்கடிகளின் காரணமாக எதுவும் எடுத்துக்கொள்ளப்படக்கூடிய சூழ்நிலை இல்லை. என்னுடைய அங்கீகாரத்தைப் பெற்று அரசுக்குச் செல்லுமானால், அதற்கு அரசிடமிருந்து பதில் வந்தால் அந்த பதிலை நான் உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். திரு. ஜி.கே. மணி.